# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 14 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை ஒக்ரோபர் 11, 2020


## கோப்பாய், வவுனியா உள்ளிட்ட கல்வியியற் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் வெளியேற்றம்

வடக்கு கிழக்கில் உள்ள தேசிய கல்வியியற்கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் என்பன தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

குறித்த கல்லூரிகளில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் கட்டம் கட்டமாக வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் நேற்று மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியிலிருந்து ஆசிரிய மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

03

### தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்கிறது இராணுவம்



## களனி பல்கலைக்கழக மாணவிக்கு கொரோனா

களனி பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் மாணவியொருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளாரென, களனி பல்கலைக்கழகத்தின் ஊடகப் பணிப்பாளர் விஜயானந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் தொற்றுக்குள்ளான இந்த மாணவியுடன் தொடர்பிலிருந்த, மேலும் 2 மாணவிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

03



## மன்னாரில் இரு கிராமங்கள் முடக்கப்பட்டன




மன்னார் பட்டித்தோட்டம் மற்றும் பெரிய கடை பகுதிகள் கோரோனா வைரஸ் பரவலைத் தடுக்க தனிமைப்படுத்தல் இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மறு அறிவித்தல் வரை இந்த கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

பட்டித்தோட்டம் பகுதியில் இதுவரை கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 6 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## முகக்கவசம் இன்றேல் ஆறு மாதம் சிறை!

இன்னும் இரு தினங்களில் புதிய சுகாதார படிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பொன்று வெளியிடப்பட உள்ளதென தெரிவிக்கும் சுகாதார அமைச்சர்பவித்திராவன்னியராச்சி, அதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோர் ஆறு மாத சிறைத்தண்டனைக்கு ஆளாகுவர் எனவும் தெரிவித்தார்.

03

## தம்புள்ளவில் 80 கடைகளுக்குச் சென்ற இருவருக்கு கொரோனா

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள சுமார் 80 கடைகளுக்கு கொரோனா தொற்றாளர்கள்இருவர்சென்றுள்ளதாக நேற்றைய தினம் இனங்காணப்பட்டதை அடுத்து பொருளாதார மத்திய நிலையம் கிருமி தொற்று நீக்கப்பட்டுள்ளது.

பிரண்டிக்ஸ்கைத்தொழிற்சாலை ஊழியருடன் தொடர்பில் இருந்த திவுலுபிட்டிய பகுதியை சேர்ந்த வியாபாரி ஒருவரும் அவருடைய லொறி ஓட்டுனரும் பிசிஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் இருவரும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்

03

## 20க்கு எதிரான நிலைப்பாடு தொடரும்



புதிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் நான்கு பிரிவுகள் தற்போதைய அரசியலமைப்பின் முதன்மைச் சரத்துக்களை மீறுகின்றமையால் பொது வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்படாமல் சட்டவரவை திருத்தமாக நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்று உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2ஆவது குடியரசு அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை 20ஆவது திருத்தச் சட்டவரைவு மீறுகிறது. ஆகையால் இது முற்றாக நிராகரிக்கப்படவேண்டும். பொது

03

## இன்றும் 61 பேருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டது

இலங்கையில் மேலும் 61 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மினுவங்கொடை தொழிற்சாலை ஊழியர்களுடன் நெருங்கிப் பழகிய 22 பேருக்கும் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட 39 பேருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, திவுலபிட்டிய கொத்தணியில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 1247 ஆக அதிகரித்துள்ளது.



இதேவேளை நாட்டில் கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 689ஆக உயர்ந்துள்ளது.

# மன்னாரில் பல கோடி பெறுமதியான கேரளா கஞ்சா, மஞ்சள் மூடைகள் பறிமுதல்; மூவர் கைது!



மன்னாரில் பல கோடி ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகள் மற்றும் மஞ்சள் கட்டி மூடைகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று இடம் பெற்றதுடன் மூவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இதன்படி, மன்னார்-வங்காலை கடற்கரையோரப் பகுதியில் பதுக்கி வைத்திருந்த நிலையில் 125 கிலோ, 800 கிராம் எடையுள்ள ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதுடன் கண்டெடுக்கப்பட்ட கேரளா கஞ்சா ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் பெறுமதியானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி மஞ்சள் கட்டி மூடைகளை நேற்று மாலை மன்னார் பொலிஸார் பறிமுதல் செய்ததுடன் ஒருவரைக் கைது செய்தனர்.



# சுகாதார வழிகாட்டல்களுடன் புலமைப் பரிசில் பரீட்சை நிறைவு!

நாடளாவிய ரீதியில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை நடை பெற்று நிறைவடைந்துள்ளது.

நாடு முழுவதும் இன்று(10) இப் பரீட்சை நடைபெற்று நிறைவடைந் துள்ளதுடன் மாணவர்கள் மகிழ்ச்சி யுடன் வெளியேறிச்சென்றதை காண முடிந்தது. மாணவர்கள் முகக்கவசம் அணிந்து கைகளை கழுவி பரீட்சை நிலையத்திற்கு பெற்றோருடன் வருகை தந்திருந்தனர்.

மேலும் பரீட்சை நிலையங்க ளுக்கு சுகாதார பிரிவினர் மற்றும் பொலிஸார் வருகை தந்து பாது காப்பு அறிவுறுத்தல்களை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சகல பரீட்சை நிலையங்களிலும் பிராந்திய சுகாதார பிரிவினர் வழங் கிய அறிவுறுத்தல்களுக்கு அமை வாக மாணவர்கள் முகக்கவசம் அணிந்து வருகை தந்ததுடன் கைகள் தூய்மைப்படுத்துவதற்கான ஏற்பாடு களும் செய்யப்பட்டிருந்தன.

# முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டன அனலைதீவு, காரைநகர்!

அனலைதீவு மற்றும் காரைநகர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிகமாக முடக்கம் இன்று முதல் (ஒக். 11) நீக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் க.மகேசன் அறிவித்துள்ளார்

கொரோனா தொற்று பரவல் சந் தேகத்தின் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் அனலைதீவு பகுதியில் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டு, தனிமைப் படுத்தப்பட்டிருந்த இரண்டு நபர்களுக் கும் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் அவர்களுக்கு தொற்று இல்லை என் பது சுகாதாரப்பிரிவினரால் உறுதிசெய் யப்பட்டுள்ளது.

எனவே அனலைதீவு மற்றும் காரை நகர் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிகமாக முடக்கம் இன்று முதல் நீக்கப்பட்டுள்ளது"என்று மாவட்ட செயலாளர்க.மகேசன் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

# கிழக்கில் நான்கு வைத்தியசாலைகள் கொரோனா சிகிச்சைக்குத் தெரிவு!



கிழக்கில் நான்கு வைத்திய சாலைகளை கொரோனா வைரஸ் தொற்றுக்கு சிகிச்சைக் காக மாற்றியமைக்குமாறு சுகா தார அமைச்சு பணிப்புரை விடுத் துள்ளதாக கிழக்கு மாகாண சுகா தாரப் பணிப்பாளர் வைத்தியர் ரி.லதாகரன் தெரிந்துள்ளார்.

மாவட்டம் தோறும் ஒரு வைத்தியசாலையை கொரோனா சிகிச்சைக்காக பயன்படுத்தும் திட்டத்திற்கு அமையவே இவ் வாறு பணிப்புரை விடுக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

அவர் கூறுகையில், "நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ளமையால் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்திய சாலை வசதிகள் அதிகமாக தேவைப் படுகின்றன.

இதற்கமைய, நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகள் பலவற்றை கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலை களாக மாற்றுவதற்கு சுகாதார அமைச்சு முடிவுசெய்து வைத்திய சாலைகளைத் தெரிவு செய்துள் ளது." என அவர் தெரிவித்தார்.

# முதல் பெண் மாவீரர் மாலதியின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல்



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப் மாலதியின் 33ஆம் ஆண்டு நினைகூரல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு, தமிழ் தேசியக் கூட்ட மைப்பின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் நாடாளுமன்ற உறுப்பி னர் சி.ஸ்ரீதரன் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது, முதல் பெண் மாவீரர் மாலதியின் படத்திற்கு சுடர் ஏற்றப் பட்டு, மலர் மாலை அணிவித்து அஞ் சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் பிர தேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## சமய நிகழ்வு நடத்தியோருக்கு எச்சரிக்கை

ஹட்டன் பகுதியில் உள்ள பிரபல கத்தோலிக்க மதத்தலம் ஒன்றில் 50க்கு மேற்பட்ட நபர்கள் பங்கேற்ற ஆராதனையை நடத்திய பொறுப்பாளருக்கு ஹட்டன் பொது சுகாதார பரிசோதகர்கள் கடும் எச்சரிக்கை விடுத்தனர்.

குறித்த தேவ ஆராதனையில்50 இற்கும் அதிகமான பொது மக்கள் கலந்து கொண்டுள்ளனர் எனக் கிடைத்த தகவலுக்கு அமையவே குறித்த சமயதலம் இன்று (11) சோதனைக்குட்படுத்தப்பட்டது.

அதன் போது 145 பேர் இந்த ஆராதனையில் கலந்து கொண்டிருந்தனர். குறித்த நபர்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றியிருந்த போதிலும் அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட 50 பேரை விட அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்ததனால் இவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

இனிவரும் காலங்களில் குறித்த நடைமுறைகளை பின்பற்றாவிட்டால் வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டது.




## எஸ்.பி.பி.யின் ஆத்மா சாந்தியடைய தீபம் ஏற்றிய பாடகர்கள்

மறைந்த பாடகர் எஸ்.பி.பால சுப்பிரமணியத்தின் நினைவாக அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் பின்னணி பாடகர்கள் சிலர் மோட்ச தீபம் ஏற்றி, பக்திப்பாடல்கள் பாடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

குறித்த நிகழ்வில், எஸ்.பி.பாலசுப்பிரமணியின் சகோதரியும் பின்னணி பாடகியுமான எஸ்.பி.சைலஜா, அவரது கணவர் சுபலேகா சுதாகர், பின்னணி பாடகர்கள் மனோ, அனுராதா ஸ்ரீராம், நகைச்சுவை நடிகர் மயில்சாமி, கலெக்டர் கே.எஸ்.கந்தசாமி மற்றும் பின்னணி பாடகர்கள், உள்ளூர் இசை கலைஞர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது எஸ்பி.சைலஜா, மனோ, அனுராதஸ்ரீராம் ஆகியோர் பக்தி பாடல்கள் பாடினர். பின்னர் அவர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

## வங்காள விரிகுடாவின் வடபகுதியில் தாழமுக்கம்



நாட்டின் பல பாகங்களில் மழை பெய்வதுடன், காற்று வீசுவதற்கான சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் வட பகுதியில் தாழமுக்கம் உருவாகும் நிலை தோன்றியுள்ளதால் அந்தக் கடற்பரப்பிற்கு செல்வதைத் தவிர்க்குமாறு மீனவர்களுக்கும், கப்பல் போக்குவரத்தில் ஈடுபடுவோருக்கும் கோரிக்கை விடுப்பதாக திணைக்களத்தின் வானிலை உத்தியோகத்தர் மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 20க்கு எதிரான...

வாக்கெடுப்பின்றி இதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தினோம்.

அரசியலமைப்புச் சட்டத்தில் சில உறுப்புரைகளை மீறுவதாக இருந்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பதை அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது.

நீதிமன்றிலே குறித்த சட்டவரைவு சவாலுக்கு உட்படுத்தப்பட்டால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை போதுமா அல்லது பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமா என்பதை மட்டும்தான் உயர் நீதிமன்றத்தினால் தெரிவிக்க முடியும் என்று அரசியலமைப்புச் சொல்கிறது.

அரசியலமைப்பில் பொதுவாக்கெடுப்பு இன்றி மாற்றம் செய்யமுடியாத சரத்துக்களில் பிரதானமானது ஜனாதிபதிக்கு சட்டவிலக்கு கொடுப்பது சம்பந்தமானது.

2ஆவது குடியரசு அரசியலமைப்பின் படி ஜனாதிபதி அதிகாரத்தில் இருப்பவர் தன்னுடைய பதவிக்காலத்தின் போது, அவருடைய எந்தச் செயலையும் நீதிமன்ற சவாலுக்கு உட்படுத்த முடியாது என்கிற அரண் போடப்பட்டது. அந்தக் காப்பரண் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சற்று விலக்கப்பட்டது.

அதன் மூலம் ஜனாதிபதி விடுகின்ற தவறுகள் அல்லது செய்யாமல் விடப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் உயர் நீதிமன்றத்திலே அடிப்படை மனித உரிமை மனுத் தாக்கல் செய்யமுடியும் . கடந்த ஆட்சிக்காலத்தில் ஆட்சிக் கவிழ்ப்புத் தொடர்பில் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அறிவிப்பினை நீதிமன்றம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தினை அடிப்படையாக் கொண்டே அவருக்கு எதிரான தீர்ப்பினை வழங்கியதாக இருந்தது.

தற்போது 20ஆவது திருத்தச் சட்டவரைவில் மீண்டும் 2ஆவது குடியரசு அரசியலமைப்பின் படி ஜனாதிபதி அதிகாரத்தில் இருப்பவருக்கு மீண்டும் ஏற்படுத்த முயலும் காப்பரணுக்கு அனுமதி வழங்க முடியாது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதியான தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது என்ற சரத்தினை மாற்றுவதற்கும் நீதிமன்றம் அனுமதி மறுப்புத் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, ஊடகங்களுக்கு கொடுக்கிற அறிவுரைகளை பின்பற்றப்படவேண்டும் என்றும் பொது உத்தியோகத்தர்களுக்கும் அறிவுரைகளை அவர்கள் பின்பற்றாவிட்டால் அவை குற்றமாகும் என்பதை மாற்றமுடியாது என்றும் அவ்வாறு மாற்றுவதாக இருந்தால் அதுவும் பொதுவாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

20 ஆவது திருத்தச் சட்டவரைவின் படி ஒரு வருடத்துக்கு பின்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கலாம் என்று முன்மொழியப்பட்டிருந்தாலும் நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆட்சிக்காலத்தில் அரைவாசிக்காலத்தின் பின்னரேயே அதாவது இரண்டரை வருடத்தின் பின்னரேயே கலைக்கமுடியும். அதற்கு முன்பதாக கலைப்பதாக இருந்தால் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இருந்தபோதிலும் நாங்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களில் பல விடயங்கள் உயர் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில், ஆணைக்குழுக்களுக்கு ஜனாதிபதி நியமனங்கள் செய்கிறபோது அதற்கான அனுமதியை அரசியலமைப்பு சபையிலே பெறவேண்டும் என்பது நீக்கப்பட்டு நாடாளுமன்ற சபை சில கருத்துக்களைச் சொல்லலாம் என்றும் ஜனாதிபதி தான் விரும்பியவர்களை நியமிக்கலாம் என்றும் கொண்டுவரப்பட்ட திருத்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை மூன்றில் இரண்டு பெரும்பாமை பலத்துடன் நிறைவேற்றலாம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவ்வாறான ஆணைக்குழுக்களை சுயாதீன ஆணைக்குழுக்களாக அழைக்க முடியாது. இது ஜனாதிபதிக்கான அதிகாரத்தை அதிகரிப்பதாகவே அமையும் என்பதால் இதற்கு எங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கை தொடரும்.

அதேவேளை இந்தத் தீர்ப்புக்கு பிறகு அரசு என்ன தீர்மானத்தை எடுக்கப்போகிறது என்ற பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற விடயங்களைக் கைவிட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களை மட்டும் முன்னெடுப்பார்களா? அல்லது பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்கிற விடயங்களையும் கூட நிறைவேற்றி, அந்தப் பகுதிகளையும் பொதுவாக்கெடுப்புக்கு விடுவார்களா? என்ற தீர்மானத்தையும் அரசு அறிவித்த பின்னர் தான் இதனை இரண்டாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

இந்தத் தீர்ப்புக்குப் பின்னரும் குறித்த திருத்த வரைவுக்கு எதிரான நிலைப்பாடு உறுதியானதாகத் தொடரும். எதிரணியில் உள்ள அனைவரும் எதிராக வாக்களிக்கவேண்டும் - என்றார்.

### கோப்பாய், வவுனியா...

இன்று வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து ஆசிரிய மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். நாளைய தினம் யாழ். கோப்பாய் தேசிய கல்வியியற்கல்லூரி ஆசிரிய மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இராணுவத்தின் கோரிக்கைக்கு அமைவாக கல்வி அமைச்சின் அனுமதியுடன் குறித்த கல்லூரிகள் தனிமைப்படுத்தும் நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இங்குள்ள விடுதிகள் முதற்கட்டமாக இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. அதே வேளை நாட்டில் உள்ள ஏனைய தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கும் அமைச்சினால் குறித்த அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்நிலையில் ஹற்றன், பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி தற்காலிக தனிமைப்படுத்தல் முகாமாக மாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதற்காக குறித்த கல்லூரியை இராணுவம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பொறுப்பேற்றதாக கல்லூரியின் பீடாதிபதி கே.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், அங்கு தங்கியிருந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கு மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் பாதுகாப்பான முறையில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதற்காக இராணுவம் 10 பேருந்துகளை ஈடுபடுத்தியிருந்தது.

இதனிடையே கடந்த முறை கோரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தை கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அயல் கிராம மக்கள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்காமல் இராணுவத்தினர் வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் திடீரென கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில், தொற்றுக்குள்ளானவர்களை தனிமை படுத்தும் செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### முகக்கவசம்...

இந்நாட்டின் மக்களை பாதுகாக்கும் வகையில் அரசாங்கம் பல்வேறு சட்டதிட்டங்களை அமுல்படுத்த உள்ளதாகவும், அதன்படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுருத்தலின் பேரில் தொற்றுநோய் பரவல் காணப்படும் பகுதிகளில் உரிய சட்டதிட்டங்களை பின்பற்ற தவறுவோருக்கு ஆறுமாத சிறைத் தண்டனையை வழங்கும் சட்டமொன்றும் அமுல்படுத்த உள்ளதென அவர் அறிவித்துள்ளார்.

குறிப்பாக முகக் கவசம் அணியாதவர்கள், நோய்த் தன்மையை அறிந்துகொள்ள முன்வராதவர்கள், சமூக இடைவெளியை பேணத் தவறியவர்கள் ஆகியோருக்கு எதிராகவே இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்றும், இந்தச் சட்டங்களை மீறினால் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்படுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தம்புள்ளவில்...

பட்டிருந்தது.

குறித்த இருவரும் பழகிய தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தை சேர்ந்த 100 இற்கும் அதிகமானவர்களின் பிசிஆர் பரிசோதனைகளை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### களனி பல்கலைக்கழக...

இதேவேளை, இந்த மாணவியின் தந்தை மினுவாங்கொட பிரன்டிக்ஸ் தொழிற்சாலையில் தொழில் புரிவதுடன், இவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொரோனா தொற்றுக்கு உள்ளான 119 பேர் தலைமறைவு!

கம்பஹா - மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை கொத்தணியில், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் என உறுதி செய்யப்பட்ட 119 பேரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சுனில் ஜயலத் மேலும் கூறியுள்ளதாவது, “மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்களைத் தேடுவதில் பாதுகாப்புத் தரப்புடன்



இணைந்து செயற்படுகின்றோம்.

மேலும், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் வழங்கிய முகவரிகள் தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று வரை 5 ஆயிரத்து 357 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுடன் உறுதி செய்யப்பட்டவர்களின் பரிசோதனை அறிக்கைகள் எம்மிடம் உள்ளன. இதில் 119 பேரைக் கண்டறிய வேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது” என அவர் குறிப்பிட்டுள்ளார்.



## உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவன் தற்கொலை

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட புன்னியடி பிரதேசத்தில் நேற்று இரவு 19 வயதுடைய மாணவன் தற்கொலை செய்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

தற்கொலை செய்துகொண்டவர் மூதூர் பொலிஸ் பிரிவிற்கு உற்பட்ட கிளிவெட்டி, பாரதிபுரம் பிரதேத்தை வதிவிடமாக உடைய அ.தனுஷன் எனவும் சாதாரன தர பரிட்சையில் 8A-B பரீட்சை முடிவுகளை பெற்று நாளை இடம்பெறவிருக்கும் உயர்தர பரீட்சைக்கு எழுத இருக்கும் மாணவர் ஆவர்.

சடலம் தற்போது கிண்ணியா தள வைத்தியசலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் தற்கொலைக்கான காரணங்களை புலனாய்வு செய்யும் நடவடிக்கைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொள்வதாகவும் பிரேத பிரச்சனையின் முடிவில் தற்கொலைக்கான காரணங்கள் வெளியிட முடியும் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய இரண்டு மாணவர்களுக்கு கொரோனா




ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள இரண்டு மாணவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

மூன்று மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த ஐவரும் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகள் ஐ.டி.எச். வைத்தியசாலை வளாகத்தில் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

## தமிழ் சினிமாவில் பாடகியாக அறிமுகமாகும் இலங்கைப்பெண்




இலங்கையை சேர்ந்த தமிழ் பெண் க்ளியோ வீ, (கிளியோபட்ரா) தமிழ் சினிமாவில் பாடகியாக அறிமுகமாகவுள்ளார்.

நடிகர் விஜய் சேதுபதி தயாரித்து, நடிக்கும் லாபம் படத்தில் இசை அமைப்பாளர் இமான் இவரை பாடகியாக அறிமுகம் செய்யவுள்ளார்.

குறித்த பெண்ணின் குடும்பம், சுவிட்சர்லாந்துக்கு புலம்பெயர்ந்து விட்டதால் அங்கேயே படித்து வளர்ந்து. தற்போது ராப் பாடகியாக உள்ளார். ஏராளமான ராப் இசை ஆல்பங்களை வெளியிட்டிருக்கிறார்.

இவர் வெளியிட்ட விடுதலை என்கிற ஆல்பம் உலக தமிழர்களிடையே மிகவும் பிரபலமடைந்தது. இந்நிலையிலேயே தமிழ் சினிமாவில் பாடகியாக அறிமுகமாக உள்ளார்.

இதுகுறித்து இமான் தனது டுவிட்டரில் தெரிவித்திருப்பதாவது,

“சுவிட்சர்லாந்தில் வசிக்கும் தமிழ் ஈழ ராப் பாடகி க்ளியோ வீயை, லாபம் படத்துக்காகத் தமிழில் அறிமுகப்படுத்துவதில் பெருமைபடுகிறேன்” என குறிப்பிட்டுள்ளார்.

## திருமலையில் மலசலகூட குழிக்குள் கஞ்சா மீட்பு

திருகோணமலை விசேட பொலிஸ் அதிரடிப்படையினரும், மொரவெவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கேரளா கஞ்சாவை மலசல கூடத்தின் குழிக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று (10) மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை-ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த (38 வயதுடையவர்) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் மற்றும் கேரளா கஞ்சா விற்பனையில் முகவராக செயற்பட்டு வரும் பிரதான சந்தேகநபரான இவரின் வீட்டை சுற்றிவளைத்த போது இவரிடம் இருந்து கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும், விசேட பொலிஸ் அதிரடிபடையினரை கண்டு விற்கப்படவிருந்த கேரள கஞ்சாவை மலசல கூட குழிக்குள் போட்ட நிலையில் அதனை பொலிஸாரும் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரும் மீட்டுள்ளனர்.

## வட கொரியா நடத்திய பிரமாண்ட இராணுவ அணிவகுப்பு

கொரியா ஆளும் தொழிலாளர் கட்சி ஸ்தாபி க்கப்பட்ட 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், வடகொரியா மகத்தான இராணுவ அணிவகுப்பை நடத்தியுள்ளதாக தெரிகின்றது.

வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் இந்த ஆண்டு வெளியிடுவதாக உறுதியளித்த புதிய மூலோபாய ஆயுதங்களைக் காண உலகநாடுகளே எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில், வட கொரியா ஒரு பெரிய அளவிலான இராணுவ அணிவகுப்பை நடத்தியுள்ளதாக தென்கொரியா தகவல் வெளியிட்டுள்ளது.

யோன்ஹாப் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘அதிக எண்ணிக்கையிலான உபகரணங்கள் மற்றும் பணியாளர்களை அணிதிரட்டுவதன் மூலம் விடியற்



காலையில் கிம் இல்-சங் சதுக்கத்தில் வட கொரியா ஒரு இராணுவ அணிவகுப்பை நடத்தியதற்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளன’ என சுருக்கமான அறிக்கையை மேற்கோளிட்டு தெற்கின் கூட்டுத் தலைவர்கள் கூறியுள்ளனர்.

தென் கொரிய மற்றும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் இதனை ஆய்வு செய்து வருகின்றனர். இது முக்கிய நிகழ்வாக இருக்கக்கூடும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.